| விடுநர் | பெறுநர் |
|---|---|
| திரு.மு.பிச்சாண்டி,<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக<br>உதவியாளர் (சத்துணவு),<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>வேலூர் - 9. | 1. ஆணையாளர், வேலூர் மாநகராட்சி,<br>2. அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்,<br>3. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள்,<br>வேலூர் மாவட்டம். |

<u>ந.க.எண்:1509/2017/பிஜி3, நாள்:12.12.2019.</u>

அய்யா / அம்மையீர்,

பொருள்: குறுஞ்செய்தி நடைமுறைப்படுத்துதல் - புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் - பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தினசரி உணவு உண்ணும் மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரத்தை குறுஞ்செய்தி அனுப்புதல் சில அறிவுரைகள் வழங்குதல் - சார்பு.

பார்வை: 12.12.2019 நாளைய குறுஞ்செய்தி அனுப்பப்பட்ட புள்ளி விவர அறிக்கை.

<<<>>>

வேலூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்தணவுத் திட்டத்தின் கீழ் இயங்கிவரும் அனைத்து பள்ளி சத்துணவு மையங்களில் உணவு உண்ணும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளியின் உதவியாளர் / ஆசிரியரின் எவரேனும் ஒருவர் பள்ளி வேலை நாட்களில் காலை 10.00மணிக்கு <u>155250</u> என்கிற இலவச எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் (SMS) அனுப்பும் திட்டம் அறிமுகப்படுத்தபப்பட்டு இரண்டு வருடமாக செயல்பாட்டில் உள்ளது.

வேலூர் மாவட்டத்தில் 12.12.2019 அன்றைய குறுஞ்செய்தி (SMS) அறிக்கை புள்ளி விவரம் 51.87% மட்டுமே குறைவாக பதிவாகி உள்ளது. குறுஞ்செய்தி அனுப்பும் தலைமையாசிரியர் அலைபேசி (Vodafone Sim) கம்பெனி பயன்படுத்துவோருக்கு SMS பதிவு ஏற்படாது என்று SMS Online-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, Vodafone Sim பயன்படுத்தும் தலைமையாசிரியர்களிடம் வேறோரு அலைபேசி கம்பெனி எண்ணை பெற்று பதிவு செய்து வேலூர் மாவட்டத்தில் 100% SMS அனுப்ப நடவடிக்கை எடுக்கும் படி அனைத்து ஆணையாளர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. இது மிகவும் அவசியமானது. ஏனென்றால் சத்துணவுத் திட்டத்தில் தினசரி மதிய உணவு உண்ணும் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மத்திய அரசு நிதி (Grant) விடுவிக்கப்படுவதால் முழு அளவில் குறுஞ்செய்தி அறிக்கை அனுப்புவதன் அவசியம் பற்றி தலைமையாசிரியர்களிடம் அறிவுறுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

த.பி.பா

எனவே, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து துவக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளிகளுக்கு சம்மந்தப்பட்ட வட்டார கல்வி அலுவலர் அவர்கள் தலைமையிலும் மற்றும் உயர்நிலைப்பள்ளி / மேல்நிலைப்பள்ளிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்டக்கல்வி அலுவலர்கள் தலைமையிலும் தலைமையாசிரியர்களுக்கு உடனடியாக ஆய்வுக்கூட்டம் நடத்தி மேற்கூறிய பொருள் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை அனைத்து ஆணையாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

12/12/09

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (சத்துணவு),
வேலூர் -9.

12/12/09

**நகல்**

1. முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், வேலூர்-9.
2. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர்/திருப்பத்தூர் /இராணிப்பேட்டை/அரக்கோணம் மற்றும் வாணியம்பாடி.
3. அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல் பணிவு:** ஆணையர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சைதாப்பேட்டை, சென்னை -15